# 66. பங்கிகள்

## திருமாலைமாற்றுத்திரிபங்கி

ஒப்புமைபற்றிவந்த கலித்தாழிசை

( ஒற்றிலாச்செய்யுள் )

தானதானனதானனதானனாதானதானனதானனதானன

**1. மேலமூககுகாசலபாலசீ வேலசாமிதுனோவறுவாலசீ**
**சீலவாறுவனோதுமிசாலவே சீலபாலசகாகுகமூலமே.**

1. மேல் அம்ஊக குக அசல பால சீவேல சாமி துன்நோவு அறுவால சீ
சீல ஆறுவனோ துமி சாலவே சீல பால சகா குக மூலமே.

சிறந்த அழகும் ஊக்கமும் உடைய குகன் என்னும் திருநாமத்தோனே! சலனமற்றவனே! யாவையும் காப்பவனே! காந்தியுள்ள வேலிற்கிறைவனே! பரம குருவே! துன்மையான நோயற்ற பரிசுத்தனே! சம்பத்துள்ள அறிவாளனே! எனக்குள்ள பசி, தாகம், சோகம், மோகம், மரணம், பிறப்பு எனும் ஆறு வலிய துன்பங்களையும் போதுமான மட்டும் அறுத்தருள் தரும நாயகனே! என்றும் மாறா இளமை உடையோனே! என்னோடுள்ளவனே! இதய கமலக் குகையின் மூலப்பொருளே என்றவாறு! 1

அடியெதுகைத்தொடைவஞ்சிவிருத்தம்

**2. மேல மூக குகாசல**
**வேல சாமி துனோவறு**
**சீல வாறு வனோதுமி**
**சீல பால சகாகுக.**

2. மேல மூக குகாசல
வேல சாமி துன்நோவுஅறு
சீல ஆறு வனோதுமி
சீல பால சகாகுக.

சிறந்த அழகும் ஊகமும் உடைய குகன் என்னும் திருநாமத்தோனே! சலனம் அற்றவனே! வேலிற்கிறைவனே! பரமகுருவே! துன்மையான நோயற்ற அறிவாளனே! ஆறு வலிய துன்பத்தையும் அறுத்தருள் அறிவாளனே! யாவையும் காப்பவனே! என்னோடுள்ளவனே! குகனே! 2

அடியெதுகையோடொரூஉவெதுகையும்
அந்தாதித் தொடையும்பெற்ற கலிவிருத்தம்

**3. மேல மூக குகாசல பாலசீ**
**சீல வாறு வனோதுமி சாலவே**
**வேல சாமி துனோவறு வாலசீ**
**சீல பால சகாகுக மூலமே.**

3. மேல மூக குகாசல பாலசீ
சீல வாறு வனோதுமி சாலவே
வேல சாமி துனோவறு வாலசீ
சீல பால சகாகுக மூலமே.

சிறந்த அழகும் ஊக்கமும் உடைய குகன் எனும் திருநாமத்தோனே! யாவையும் காப்பவனே! சம்பத்துள்ள அறிவாளனே! எனக்குள்ள பசி, தாகம், சோகம், மோகம், இறப்பு, பிறப்பு எனும் ஆறு வலிய துன்பத்தையும் போதுமான மட்டும் அறுத்தருள் வேலிறைவனே! பரம குருவே! துன்மையான நோயற்ற பரிசுத்தனே! சம்பத்துள்ள அறிவாளனே! என்றும் இளமைப்பருவம் உடையவனே! என்னோடுள்ளவனே! இதய கமலக் குகையின் மூலப் பொருளே! 3

திருமாலைமாற்றுப்பொருள் - மேல்அம் ஊக = சிறந்த அழகும் யூகமுமுடைய, குக = குகனென்னுந் திருநாமத்தோனே, அசல = சலனமற்றவனே, பால = (யாவையும்) காப்பவனே, சீவேல = காந்தியுள்ள வேலிற்கிறைவனே, சாமி = (பரம) குருவே, துன்னோவறு = துன்மையான நோயற்ற, வால = பரிசுத்தனே, சீசீல = சம்பத்துள்ள வறிவாளனே, ஆறுவன்னோ = (எனக்குள்ள பசி - தாகம் - சோகம் - மோகம் - சரா - மரணமெனும்) ஆறுவலிய துன்பத்தையும், சால = போதுமானமட்டும், துமி = அறுத்தருள், சீல = தருமநாயகனே, பால = என்றும் மாறா விளமைப் பருவமுடையோனே, சகா = என்னோடுள்ளவனே, குகமூலமே = (இதயகமலக்) குகையின் மூலப்பொருளே என்றவாறு, ஏ- அசை. சீ - ஸ்ரீ என்னும் வடமொழி விகாரம். ஸகன் - வடசொல். துன்னோ - துன்னெறி யென்பதன்ன புணர்க்கைத்து. திருக்குற்றாலப்படலத்து 3-ல் "துன்னெறி" என்றார் கந்தபுராணத்தாரும்.

## எரிவரைக்குகன் தசபங்கி

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

நனநன நானன நானன நானன நானன நானாநந்
நனநன நானா நனனா நனநன நனநன நத்தனனா

**1 உலகமெ லாம்வனை யோமுரு காவயி லோகைய னேகாவிண்**
**ணுலகர வாமா கரனே கறுவலி லுருவளர் கட்டழகா**
**நலமலி கேதன நாமுதல் வாதிரு நாகைய னேகூவின்**
**னறவணி பூண்மா குரவா குறுகலி னரநிமிர் கொக்கரியே**
**யிலகும காமயி லீசுர னேகன வீகைய னேமாவிண்**
**ணிறைமகள் கான்மா தரையா மறுவறு மெரிவரை மற்குகனே**
**மலமிலர் காணிச மாசுர னேயடல் வாகைய னேதேவொண்**
**மதியொலி யானா டிருவே சிறுமையில் வரமருள் சிற்பரனே.**

1 உலகம் எலாம் வனைஒம் முருகா அயில் ஒகையனே காவிண்
உலகர்அவாம் ஆகரனே கறுவலில் உருவளர் கட்டழகா
நலமலி கேதன நா முதல்வா திருநாகு ஐயனே கூவின்
நறவு அணி பூண்மா குரவா குறுகல்இல் நர நிமிர் கொக்குஅரியே

2.1. **கறுவலில்** = சினமில்லாத. நாகையன் என்பதில் **நாகு** = இளமை.

கூவாகிய இப்பூமியையும், வில்லாகிய ஒளிப்பொருள்களையும் மணத்தோடுங் கூடிய திருவணியாகப் பூண்டருள் முன்னவனே யெனும்பொருளைக் "கூவின்னறவணி பூண்மாகுரவா" எனுஞ் சொற்கள் பயத்தல் காண்க.

நாரம் 'நரம்' எனக்குறுகிற்று. நாரம் = நீர்; கடலுக்கிலக்கணை.

இலகு மகாமயில் ஈசுரனே கன ஈகையனே மாவிண்
இறைமகள் கான் மாதர் ஐயா மறுஅறு எரிவரை மல்குகனே
மலம் இலர் காண்நிச மாசுரனே அடல் வாகையனேதே ஒண்
மதி ஒலியானாள் திருவே சிறுமை இல்வரம் அருள் சிற்பரனே.

உலகம் எல்லாம் படைக்கும் ஓங்கார முருகா! வேற்படை ஏந்தும் ஆனந்தனே காத்தருள்வாயாக! விண்ணுலகத் தேவர்கள் விரும்பும் கள்வனே! சினம் இல்லாத திருவுருவம் நிலைபெறும் கட்டழகனே! அழகு மிகுந்த கொடியை உடையோனே! ஒளியான முதல்வனே! அழகும் இளமையும் உள்ள தலைவனே! பூவுலகையும் ஒளிப் பொருள்களையும் மணம் கமழ் மலர் மாலையாக அணியும் பரமகுருவே! குறுகல் இல்லாத கடலில் ஓங்கி வளர்ந்த மாமரத்தை அழித்தவனே! விளங்கும் பெரிய மயில்வாகனத்தின் ஈசுரனே! பெருமைமிக்க கொடையாளியே! பெரிய விண்ணுலக அரசன் இந்திரன் மகளுக்கும், காட்டில் வாழ் மாது வள்ளிக்கும் தலைவனே! குற்றமற்ற நெருப்பு மலையின் வலிய குகனே! மும்மலம் நீங்கியவர் காணக்கூடிய மெய்யான மகாதேவனே! வலிமையுடைய வெற்றியுடையவனே! இனிய ஒளி பொருந்திய கங்கையாக ஓசை எழுப்பி ஓடுகின்ற கங்கையின் செல்வனே! குறைவு இல்லாத வரத்தை அருளும் சிவபெருமானே! 1

அடியெதுகைத்தொடைவஞ்சிவிருத்தம்

**2. உலகமெ லாம்வனை யோமுருகா**
**நலமலி கேதன நாமுதல்வா**
**இலகும காமயி லீசுரனே**
**மலமிலர் காணிச மாசுரனே.**

2. உலகம் எலாம் வனை ஓம் முருகா
நலமலி கேதன நா முதல்வா
இலகு மகா மயில் ஈசுரனே
மலம்இலர் காண்நிச மாசுரனே.

உலகம் எல்லாம் படைக்கும் ஓங்கார முருகா! அழகு மிகுந்த கொடி உடையவனே! ஒளியான முதல்வனே! விளங்கும் பெரிய மயில் வாகனத்தில் வரும் ஈசுரனே! மும்மலம் நீங்கியவர் காணக்கூடிய மெய்யான மகாதேவனே! 2

**3. கறுவலி லுருவளர் கட்டழகா**
**குறுகலி னரநிமிர் கொக்கரியே**
**மறுவறு மெரிவரை மற்குகனே**
**சிறுமையில் வரமருள் சிற்பரனே.**

3 *கறுவல் இல் உருவளர் கட்டுஅழகா*
*குறுகல்இல் நர நிமிர் கொக்கு அரியே*
*மறுஅறும் எரிவரை மல் குகனே*
*சிறுமை இல் வரம் அருள் சிற்பரனே.*

சினம் இல்லாத திருவுருவம் நிலைபெறும் கட்டழகனே! குறுகல் இல்லாத கடலின் நடுவே ஓங்கி வளர்ந்த மாமரத்தை அழித்தவனே! குற்றமற்ற நெருப்பு மலையின் வலிய குகனே! குறைவு இல்லாத வரங்களை அருளும் சிவபெருமானே! 3

இரண்டடியெதுகை யடியியைபுத்தொடைவஞ்சிவிருத்தம்

**4. ஓமுரு காவயி லோகையனே**
**நாமுதல் வாதிரு நாகையனே**
**ஈசுர னேகன வீகையனே**
**மாசுர னேயடல் வாகையனே.**

4 *ஓம் முருகா அயில் ஓகையனே*
*நா முதல்வா திருநாகு ஐயனே*
*ஈசுரனே கன ஈ கையனே*
*மாசுரனே அடல் வாகையனே.*

ஓங்கார முருகனே! வேற்படை ஏந்திய ஆனந்தனே! ஒளியுடைய முதல்வனே! அழகிய இளமையுடைய தலைவனே! கடவுளே! பெருமையுடைய கொடையாளியே! மகாதேவனே! வலிய வெற்றியுடையவனே! 4

கட்டளைக்கலித்துறை

**5. உலகமெ லாம்வனை யோமுரு காவயி லோகையனே**
**நலமலி கேதன நாமுதல் வாதிரு நாகையனே**
**யிலகும காமயி லீசுர னேகன வீகையனே**
**மலமிலர் காணிச மாசுர னேயடல் வாகையனே.**

5 உலகம் எலாம் வனை ஓம் முருகா அயில் ஓகையனே
நலம்மலி கேதன நா முதல் வா திரு நாகு ஐயனே
இலகு மகா மயில் ஈசுரனே கன ஈகையனே
மலம் இலர் காண்நிச மாசுரனே அடல் வாகையனே.

உலகம் எல்லாவற்றையும் படைக்கும் ஓங்கார முருகா! வேற்படை ஏந்திய ஆனந்தனே! அழகுமிகு கொடி உடையவனே! ஒளி பொருந்திய முதல்வனே! அழகிய இளமையுடைய தலைவனே! விளங்கு பெரிய மயில் வாகனத்தில் வரும் ஈசுரனே! பெருமையுடைய கொடையாளியே! மும்மலம் நீங்கியவர் காணக்கூடிய மெய்யான மகாதேவனே! வலிய வெற்றி உடையவனே! 5

தரவுகொச்சகக்கலிப்பா

**6. ஓகையனே காவிண் ணுலகரவா மாகரனே**
**நாகையனே கூவின் னறவணிபூண் மாகுரவா**
**வீகையனே மாவிண் ணிறைமகள்கான் மாதரையா**
**வாகையனே தேவொண் மதியொலியா னாடிருவே.**

6 ஓகையனே கா விண்உலகர் அவாம் ஆகரனே
நாகு ஐயனே கூவில் நறவு அணி பூண்மா குரவா
ஈகையனே மாவிண் இறைமகள் கான் மாதர் ஐயா
வாகையனே தே ஒண் மதி ஒலி ஆனாள் திருவே.

ஆனந்தனே, காத்தருள்வாயாக! விண்ணுலகத் தேவர் விரும்பும் கள்வனே! இளமையுடைய தலைவனே! பூமியையும் ஒளிப் பொருள்களையும் மணம்கமழ் மலர் மாலையாக அணியும் பரமகுருவே! கொடையாளியே! பெரிய விண்ணுலக அரசன் இந்திரன் மகள், காட்டில் வாழ் மாதர் தம் தலைவனே! வெற்றி மாலையனே! இனிய ஒளியுடைய கங்கை ஒலித்துவரும் கங்கையானவள் செல்வனே! 6

கலிவிருத்தம்

**7. காவிண் ணுலக ரவாமா கரனே**
**கூவின் னறவணி பூண்மா குரவா**
**மாவிண் ணிறைமகள் கான்மா தரையா**
**தேவொண் மதியொலி யானா டிருவே.**

7 கா விண்உலகர் அவாம் ஆகரனே
கூவில் நறவு அணி பூண்மா குரவா
மா விண் இறைமகள் கான் மாதர் ஐயா
தே ஒண் மதி ஒலியாள் திருவே.

விண்ணுலகத்தவர் விரும்பும் கள்வனே, காத்தருள்வாயாக! பூமியையும் ஒளிப் பொருள்களையும் மணம்கமழ் மாலையாக அணிந்த பரம குருவே! பெரிய விண்ணுலக அரசன் இந்திரன் மகள், காட்டில் வாழ் மாதர் தம் தலைவனே! இனிய ஒளி பொருந்திய மதியையும் நாதத்தையும் உடையவள் செல்வமே! 7

ஒருவிகற்ப நேரிசைவெண்பா

**8. ஓகையனே காவிண் ணுலகரவா மாகரனே**
**நாகையனே கூவின் னறவணிபூண் – மாகுரவா**
**வீகையனே மாவிண் ணிறைமகள்கான் மாதரையா**
**வாகையனே தேவொண் மதி.**

8 ஓகையனே கா விண்உலகர் அவாம் ஆகரனே
நாகுஐயனே கூவில் நறவு அணி பூண்மா குரவா
ஈகையனே மாவிண் இறைமகள் கான்மாதர் ஐயா
வாகையனே தே ஒண்மதி.

ஆனந்தனே, காத்தருள்வாயாக! விண்ணுலகத்தவர் விரும்பும் கள்வனே! இளமை பொருந்திய தலைவனே! இப்பூமியையும் ஒளிப் பொருள்களையும் மணம் கமழ் மாலையாக அணியும் பரம குருவே! கொடையாளியே! பெரிய விண்ணுலகத்து அரசன் இந்திரன் மகள், காட்டில் வாழும் மாதர் தம் தலைவனே! வெற்றி மாலையுடையவனே! இனிய ஒளி பொருந்திய கங்கையே! 8

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**9. காவிண் ணுலக ரவாமா கரனே கறுவலி லுருவளர் கட்டழகா**
**கூவின் னறவணி பூண்மா குரவா குறுகலி னரநிமிர் கொக்கரியே**
**மாவிண் ணிறைமகள் கான்மா தரையா மறுவறு மெரிவரை மற்குகனே**
**தேவொண் மதியொலி யானா டிருவே சிறுமையில் வரமருள் சிற்பரனே.**

9 கா விண்உலகர் அவாம் ஆகரனே கறுவல் இல் உருவளர் கட்டழகா
கூ வில் நறவு அணி பூண் மா குரவா குறுகல் இல் நர நிமிர் கொக்கு அரியே
மாவிண் இறை மகள் கான் மாதர் ஐயா மறுஅறும் எரிவரை மல் குகனே
தேஒண்மதி ஒலி ஆனாள் திருவே சிறுமை இல் வரம் அருள் சிற்பரனே.

வலிமையான விண்ணுலகத்தவர் விரும்பும் கள்வனே! சினமில்லாத திருவுருவம் நிலைபெறும் கட்டழகா! பூமியையும் ஒளிப் பொருள்களையும் மணம் கமழ் மாலையாக அணியும் பரமகுருவே! குறுகல் இல்லாத கடலின் நடுவில் ஓங்கி வளர்ந்த மாமரத்தை அழித்தவனே! பெரிய விண்ணுலக அரசன் இந்திரன் மகள், காட்டில் வாழும் மாதர் தம் தலைவனே! குற்றமற்ற நெருப்பு மலையின் வலிய குகனே! இனிய ஒளியுடைய கங்கை என்றும் ஒலிக்கும் கங்கையானவளின் செல்வனே! குறைவு இல்லாத வரங்களை அருளும் சிவபெருமானே! 9

வருக்கவெதுகை வஞ்சித்துறை

**10. உருவளர் கட்டழகா**
**நரநிமிர் கொக்கரியே**
**எரிவரை மற்குகனே**
**வரமருள் சிற்பரனே.**

10 உருவளர் கட்டழகா
நரநிமிர் கொக்கு அரியே
எரிவரை மல்குகனே
வரம்அருள் சிற்பரனே.

திருவுருவம் நிலைபெறும் கட்டழகா! கடல் நடுவில் ஓங்கி வளர்ந்த மாமரத்தை அளித்தவனே! நெருப்பு மலையின் வலிய குகனே! வரங்களை அருளும் சிவபெருமானே! 10

| | | |
|---|---|---|
| ***ஆகப்பிரபந்தம் அறுபத்தாறினும் போந்த திருப்பாடல்*** | - | ***816*** |
| ***தெய்வவணக்கச் செய்யுள்*** | - | ***3*** |
| ***ஆகத்திருப்பாடல்*** | - | ***819*** |